# சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி 1 - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களம் என்பவற்றின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

பகுதி 2 - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு மீதான விரிவான அறிக்கைகள்

## பகுதி 1

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களம் என்பவற்றின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

### 1. அமச்சின் கீழான திணைக்களம்

| செலவினத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
| --- | --- |
| இல. 217 | நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் |

### 2. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ்வரும் திணைக்களத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் கணக்காண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 3. கணக்குகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

(அ) கணக்குகள் சமர்ப்பித்தல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களம் என்பவற்றின் ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2011 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) எல்லைகளைப் பின்பற்றுதல்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் என்பவற்றினால் அனுமதிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரம் பின்வருமாறு.

| அமைச்சு/ திணைக்களம் | விடய இலக்கம் | செலவு மீதான உச்ச எல்லை | உள்ள படியானது | பெறுவனவு மீதான இழிவு எல்லை | குறைவு | வரவு மீதி மீதான உச்ச எல்லை | உள்ள படியானது |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சு | 21701 | 18,000,000 | 9,958,507 | 6,000,000 | 7,496,865 | 66,000,000 | 40,388,588 |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 12001 | 35,000,000 | 22,503,581 | 6,000,000 | 9,717,644 | 80,000,000 | 55,431,807 |

## 3.3 கட்டுநிதியும் பொது வைப்புக் கணக்கும்

### 3.3.1 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ்வரும் திணைக்களம் என்பனவற்றில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 2,720,418 தொகையான கட்டுநிதி வரவு மீதியும் ரூபா 5,064,000 தொகையான செலவு மீதியும் காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று பின்வருமாறு.

| அமைச்சு/ திணைக்களம் | காலப்பகுப்பாய்வு 1 வருடத்திற்கு மேல் 2 இற்குக் குறைவு | 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி வரவு/(செலவு) |
|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சு | (5,064,000) | (5,064,000) |
| நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 2,720,418 | 2,720,418 |

## 3.3.2 பொது வைப்புக் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழான திணைக்களம் என்பவற்றின் பொது வைப்புக் கணக்கு மீதிகள் ரூபா 35,583,026 ஆனதுடன் அவற்றின் பகுப்பாய்வுகள் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | தலைப்பு | 1 ஆண்டினை விடக் குறைவு | 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளுக்கு குறைவு | 2 ஆண்டு களுக்கு மேல் 5 ஆண்டு களுக்கு குறைவு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளீர் விவகார அமைச்சு | 120 | 32,267,427 | 110,673 | 175,075 | 32,553,175 |
| நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் | 217 | 2,860,651 | 169,200 | - | 3,029,851 |

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

விடய இலக்கம் 12001 இன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றின்படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,254,152 மொத்தமான மீதிகள் நிலுவையாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகளின் அறவீடு மீதான தொடர் நடவடிக்கை நலிந்த நிலையில் இருந்தது.

## 1.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2009 திசெம்பர் 9 ஆந் திகதிய பீஎப் 441 ஆம் இலக்க அரச நிதித் திணைக்கள சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2010 ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இறுதியாக 2009 ஆம் ஆண்டின் போதே பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 2009 ஆம் ஆண்டிற்கான கணிப்பீட்டுச் சபை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட மிகை, குறைவு மற்றும் ஏனைய சிபார்சுகள் என்பன மீது உரிய ஏற்பாடுகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சானது 2009 ஆம் ஆண்டிற்கான இருப்பு மற்றும் பொருள் மெய்மையாய்வை மேற்கொண்டு மெய்மையாய்வுச் சபை அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் நூலகத்தில் காணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பொருட்கள் கணிப்பீட்டுச் சபைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 4,631,486 ஆனதுடன் அவை 1 ஆண்டினைவிட குறைந்த காலப்பகுதிக்குரியதாகும்.

இருந்த போதிலும் 1994 யூலை 12 ஆந்திகதி 35/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி 04 ஆம் பந்தியின் படி மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

## 1.5. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| **(i)** | நிதிச்சட்ட ஏற்பாடுகள் | **ரூபா** | |
| | 2008 திசெம்பர் 24 இன் சீஎம்/08/2253/338/143 ஆம் இலக்க அமைச்சரவை குறிப்பு | 792,480 | மொனறாகலை ஒன்றிணைந்த குடும்ப அபிவிருத்திச் செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கைகள் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படாமல் பதிலாக தனியார் நிறுவனம் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| **(ii)** | நிதிப்பிரமாணங்கள் | | |
| | நிதிப்பிரமாணம் 371(5) | 4,494,670 | மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட உப கட்டுநிதிகள் திசெம்பர் 31 வரையிற் கூட தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 1,422,446 | வழங்கப்பட்டு ஆனால் 6 |

| | |
|---|---|
| திகதிய 06/2010 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாட்டுச் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தி | கட்டுநிதிகள் 2010 திசெம்பர் 24 இன் பின்னர் வழங்கப்பட முடியாத போதிலும் கட்டுநிதிகள் 2010 திசெம்பர் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் வழங்கப்பட்டிருந்தன. |

## 1.6 செயலாற்றல்

போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் போதியளவில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்படுகின்றது.

(அ) சுழற்சியடிப்படையில் கடன்கள் வழங்கல்

குறைந்த வருமானம் பெறுகின்ற பெண்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக நவீன முறையாக அமுலாக்கப்பட்ட மீள் சுழற்சியடிப்படை கடன்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கு பிரதேச செயலகங்களிற்காக 1992 முதல் 2008 வரையான காலத்தின் போது ரூபா 86,100,300 ஆன தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1992 முதல் 2005 வரையான காலத்தின் போது கிடைத்த ரூபா 54,100,300 ஆன தொகை மீள் சுழற்சியடிப்படையல்லாமல் இருந்தது.

(ii) பதிவு செய்யப்படாத கான்தா பலமண்டலவின் உறுப்பினர்களிற்கு கடன்கள் வழங்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டு இறுதிவரை வழங்கப்பட்ட கடன் தொகைகள் மற்றும் தற்போது வரை அறவிட வேண்டிய தொகை என்பவை மீதான தகவல்கள் அமைச்சிடம் காணப்படவில்லை.

| | ஊழியர் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 09 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 17 | 10 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 633 | 551 | 82 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 58 | 53 | 05 |
| | மொத்தம் | 717 | 623 | 94 |

## பகுதி 2

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 217 - நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களம்

2010 ஆம் ஆண்டிற்கான நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் நிதி அறிக்கைகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடங்களான ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தினை கொண்டு காணப்படுகின்றது.

| சொத்துக்களின் வகுதி | அலகுகள் அல்லது அளவுகளின் எண்ணிக்கை | காலப் பகுதி |
|---|---|---|
| மோட்டார் வாகனம் | 01 | 04 ஆண்டுகள் |
| கணனி மேசை | 04 | 03 ஆண்டுகள் |
| மின்சார உபகரணம் மற்றும் தளபாட உபகரணங்கள் | 49 | 03 ஆண்டுகள் |

(ஆ) நிதிப்பிரமாணம் 756, 757(2) மற்றும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய பிஎவ்/441 ஆம் இலக்க மற்றும் 2006 யூலை 30 ஆம் திகதிய 442 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், 2011 சனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் 2010 ஆம் ஆண்டிற்கான பௌதீக பொருட் கணிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டு 2011 மார்ச் 05 ஆம் திகதிக்கு முன்னர் பொருள்மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயலாற்றல்

(அ) போதியளவு நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

(i) தேசிய கொள்கைகளை வடிவமைப்பதற்காக அமைச்சிற்கு ஆலேசனைகள் மற்றும் பிரேரணைகளை சமர்ப்பித்தல் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக உள்ள போதிலும் இத் திகதிவரை செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அநாதைகள் வீடமைப்பு கட்டளைச் சட்டம் மற்றும் சிறுவர் மற்றும் இளைஞர் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் திருத்தச் செயற்பாடுகள் இது வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) 2010 சனவரி முதல் திசெம்பர் வரையான காலத்தின் போது 31 நன்கொடையாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 2,664,136 ஆன தொகை மீளாய்வாண்டு இறுதிவரை செவன சரன பொது வைப்புக் கணக்கில் விடப்பட்டிருந்ததுடன் இப்பணத்திலிருந்து

செவன சரன தத்தெடுத்த பெற்றோர் திட்டத்தின் கீழ் பாதுகாப்பு வழங்குவதற்கோ அல்லது பராமரிப்பை வழங்குவதற்கான சிறார்களை இனங்காண்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

நாட்டிலுள்ள சகல சிறுவர் இல்லங்கள் செயற்படுத்துதல் தொடர்பான தகவல்களைக் கோருகின்ற கடிதங்கள் 2010 ஒக்டோபர் 08 இல் 09 மாகாணங்களின் மாகாண ஆணையாளர்களிற்கு முகவரியிடப்பட்டிருந்த போதிலும் 2011 ஒக்டோபர் 31 வரை கணக்காய்விற்கு 05 மாகாணங்கள் தொடர்பான தகவல்கள் மாத்திரமே பெறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட மற்றும் இடையூறு விளைவிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பிற்காக அவசியமான நடவடிக்கை எடுத்தல் திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக இருந்த போதிலும் சிறுவர் இல்லங்களில் முறையான மேற்பார்வை இன்மை காரணமாக பின்வரும் பிரச்சனைகள் எழுகின்றது.

(அ) சிறுவர் இல்லங்கள் பதிவுசெய்யடாமை

அனாதை இல்லங்களின் தாபிப்பு மற்றும் பராமரிப்புகளில் 1941 இன் 22 ஆம் இலக்க அனாதையில்லக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்படி பதிவு செய்யாமல் செயற்பட முடியாதிருந்தது. இருந்த போதிலும் கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 4 மாகாணங்களில் பல அனாதையில்லங்கள் பதிவுசெய்யப்படாதிருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு இறுதியிலுள்ளவாறு அவ்வாறான இல்லங்களிலுள்ள சிறுவர் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

| **மாகாணம்** | **அனாதை இல்லங்களின் எண்ணிக்கை** | **சிறுவர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| மேல் | 27 | 175 |
| வட மேல் | 15 | 518 |
| மத்திய | 13 | 285 |
| கிழக்கு | 10 | 221 |
| மொத்தம் | 65 | 1,199 |

வேண்டியிருந்த போதிலும் பின்வரும் அனாதை இல்லங்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

| **மாகாணம்** | **சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை** | **மேற்பார்வைக்கு வருகைதந்நத எண்ணிக்கை** |
|---|---|---|
| மத்திய | 15 | இல்லை |
| வடமேல் | 04 | 01 |
| கிழக்கு | 03 | 02 |

(ஏ) கோவைகளை முறையாகப் பேணுவதற்கு தவறியமை

தன்னரர்வ சிறுவர் அனாதை இல்லங்களின் சேவைகளின் நிலையை தரமுயர்த்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொது நியமங்களின்படி, நன்னடத்தை உத்தியோகத்தர்களின் அறிக்கையுடன் சேர்த்து ஒவ்வொரு சிறுவர்களிற்கும் தனியான கோவைகள் பேணப்பட வேண்டிய போதிலும் மத்திய மாகாணத்தில் 08 சிறுவர் இல்லங்களில் வசிக்கின்ற 156 சிறுவர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள 06 சிறுவர் இல்லங்களில் வசிக்கின்ற 213 சிறுவர்களிற்காக நன்னடத்தை உத்தியோகத்தர்களின் அறிக்கையுடன் சேர்த்து தனியான கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(i) திணைக்கள நியமங்களிற்கு முரணான அனாதை இல்லங்களின் பராமரிப்பு

தன்னார்வ சிறுவர் இல்லங்களின் சேவைகளின் நிலையை தரமுயர்த்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பொது நியமங்களிற்கு முரணாக மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்கள் மற்றும் விடுதிகளாக 36 சிறுவர்களுடன் வசிக்கின்ற 02 சிறுவர் இல்லங்கள் பேணப்பட்டிருந்தன.

(i) சிறுவர் இல்லங்கள் மீது முறையான மேற்பார்வைக்கு வருகைதராமை காரணமாக பின்வரும் பிரச்சனைகள் எழுந்திருந்ததென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் இல்லங்கள் மீது

## 2.9 உள்ளகக் கட்டுப்பாடு

(அ) உள்ளளக் கணக்காய்வு

2000 மார்ச் 15 ஆந்திகதிய பிஎவ்/பிஈ/7 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2006 சனவரி 25 ஆந் திகதிய ஐஏஐ/2001/01 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை என்பனவற்றின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அமுலாக்கல்

2000 யூன் 12 ஆந்திகதிய ஐஏஐ/2000/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.